# அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை – 35.

## மாணவர் சேர்க்கை : 2024–25

1. சென்னை – 35, நந்தனம், அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் 2024–25 ம் கல்வியாண்டின் மாணவர் சேர்க்கையானது TNGASA – 2024 என்ற ONLINE முகவரியில் விண்ணப்பித்த மாணவர்களின் மதிப்பெண் தர வரிசை அடிப்படையில் தயாரிக்கப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது.

2. கலந்தாய்விற்கு வரும் மாணவர்கள் கால அட்டவணையில் குறிப்பிட்ட நாளில் காலை 9.30 மணிக்குள் கலந்தாய்வு அரங்கத்திற்கு வந்துவிட வேண்டும்.

3. இக்கலந்தாய்வு முறையானது கீழ்காணும் நான்கு நிகழ்வுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

   நிகழ்வு : 1 வருகையை பதிவு செய்தல்
   நிகழ்வு : 2 மதிப்பெண் பட்டியல் மற்றும் பிற ஆவணங்கள் சரிபார்த்தல்
   நிகழ்வு : 3 சேர்க்கைக்கான ஒதுக்கீடு பெறுதல்
   நிகழ்வு : 4 கட்டணம் செலுத்தி சேர்க்கையை உறுதி செய்தல்.

4. கால அட்டவணையில் குறிப்பிட்டபடி தர வரிசையிலான மதிப்பெண் பெற்ற மாணவர்களை மட்டுமே தினமும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் பெற்ற மதிப்பெண்படி சேர்க்கை அரங்கிற்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

5. கலந்தாய்விற்கு தாமதமாகவோ அல்லது கால அட்டவணையில் குறிப்பிட்ட நாளில் வராமல் இருந்தாலோ அவர் வந்த நாள் மற்றும் நேரம் பதிவு செய்யப்பட்டு அன்றைய / அப்போதைய நாள் நேர/நிலவரப்படி உள்ள தரவரிசை மற்றும் இன சுழற்சி அடிப்படையில் மட்டுமே சேர்க்கை வழங்கப்படும். எனவே, மாணவர்கள் கலந்தாய்வுக்கு தாமதமாக வருவதை தவிர்ப்பது நல்லது.

6. மாணவர்கள் சேர்க்கைக்காக அழைக்கப்படும்போது அவர்கள் தங்கள் கைவசம் விண்ணப்பப் படிவம் மற்றும் அனைத்து ஆவணங்களின் அசல் மற்றும் நான்கு நகல்களை (XEROX COPIES) வைத்திருக்க வேண்டும்.

7. சேர்க்கைக்கு அழைக்கப்படும் மாணவரின் விருப்பம் (CHOICE) கேட்கப்பட்டு அதன்படி அதேற்கேற்ற இருக்கையில் அமர்ந்தவுடன் அவர்களின் ஆவணங்களை சார்ந்த துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் சரி பார்த்து வகுப்பு வாரியான இட ஒதுக்கீட்டின்படி இன சுழற்சி அடிப்படையில் சேர்க்கை வழங்குவார்கள்.

8. கலந்தாய்வின் போது தனக்கான படிப்பு (COURSE) மற்றும் பாடத்தை (SUBJECT) தன்னுடைய விருப்பப்படி அப்போது இருக்கின்ற காலியிட மற்றும் இன சுழற்சி இட ஒதுக்கீடு நிலவரப்படி தேர்வு செய்து கொள்ளலாம்.

9. கலந்தாய்வின் போது வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள்

1. 10 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்
2. 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்
3. பள்ளி மாற்றுச் சான்றிதழ்
4. நிரந்தர சாதிச் சான்றிதழ்
5. பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் – 4

10. மாணவ / மாணவிகள் சேர்க்கை தொடர்பான விளக்கங்களை பெற complaints@gacN என்ற மின்னஞ்சலிலும் புகார்களை கல்லூரி முதல்வரிடம் நேரடியாகத் தெரிவிக்கலாம்.

11. தமிழக அரசின் உயர் கல்வித்துறை வழங்கிய இடஒதுக்கீட்டு ஆணையின்படி கீழ்காணும் விகிதாச்சார அடிப்படையில் இன சுழற்சியின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை வழங்கப்படும்.

| வ.எண். | இடஒதுக்கீடு வகைகள் | விகிதாசச்சாரம் |
|---|---|---|
| 1. | பொதுப் போட்டி : Open Competition (OC) | 31.0 % |
| 2. | பிற்பட்ட வகுப்பினர் : Backward Class (BC) | 26.5 % |
| 3. | பிற்பட்ட முஸ்லீம் வகுப்பினர் : Backward Class Muslim (BCM) | 3.5 % |
| 4. | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் : Most Backward Class & Denotififed Communities (MBC & DNC) | 20 % |
| 5. | பட்டியலின வகுப்பினர் : Scheduled Caste (SC) | 15.0 % |
| 6. | பட்டியலின வகுப்பினர் அருந்ததியர் : Scheduled Caste (Arunthathiyars) | 3.0 % |
| 7. | பட்டியலின பழங்குடியினர் : Scheduled Tribes (ST) | 1.0 % |
| | மொத்தம் | 100.0 % |

முதல்வர்

## முக்கியமான குறிப்பு:

1. மாணவர்கள் கலந்தாய்வு நடைபெறும் நாட்களில் காலை 9.30 மணிக்கு முன்னதாகவே சேர்க்கை அரங்கில் இருத்தல் வேண்டும். தாமதமாக வருபவர்கள் அந்த நேரத்தில் சென்று கொண்டிருக்கும் மதிப்பெண் அடிப்படையிலேயே சேர்க்கைக்காக அனுமதிக்கப்படுவார்கள்.

2. கலந்தாய்வில் பங்கு பெறுவோர் கட்டாயமாக கொண்டு வர வேண்டிய ஆவணங்கள்:

1. பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பம் (Downloded Application)
2. $10^{th}$, $11^{th}$, $12^{th}$ மதிப்பெண் பட்டியல் அசல் மற்றும் 2 நகல்கள்
3. பள்ளி மாற்றுச் சான்றிதழ் அசல் மற்றும் 2 நகல்கள்
4. சாதிச் சான்றிதழ் அசல் மற்றும் 2 நகல்கள்
5. பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் (Passport size Photos) – 3 Nos.
6. வங்கிக் கணக்குப் புத்தக முதல் பக்க நகல்
7. ஆதார் அடையாள அட்டை நகல்–2
8. உரிய சேர்க்கைக் கட்டணம் (சேர்க்கைக் கட்டண விவரம் கல்லூரியின் www.gacnandanam.com என்ற இணையதள முகவரியில் பதிவேற்றப்பட்டுள்ளது)

3. மேலும் விவரங்களுக்கு www.gacnandanam.com என்ற இணைய தளத்திலோ அல்லது nandanamcollegeadmission@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் வழியாகவே தொடர்பு கொண்டு அறியலாம்.

முதல்வர்